

கடலூர் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணியின் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், வழக்கறிஞரணி மாவட்ட அமைப்பாளர் அருள் ஜோதி, வழக்கறிஞர் எம். கே. ராமன் ,மாவட்ட நிர்வாகிகள் எம்.இ.சையது அன்சாரி, அ.மாரிமுத்து, எஸ்.கே.அருணாச்சலம் மற்றும் கழக வழக்கறிஞர்கள் ஆர்.பாபு, வே. ஹரிஹரன், எஸ்.புகழேந்தி ஆகியோரிடம் வழங்கினார்.



அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (04.05.2025) சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, கோதண்ட ராமர் திருக்கோயிலில் நடைபெற்ற திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில் கலந்துகொண்டார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, உதவி ஆணையர் க.சிவக்குமார், திருக்கோயில் செயல் அலுவலர்கள் முரளீதரன், நித்யானந்தம், சந்திரமோகன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாளையொட்டி

# 5 சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் நாட்டுடைமையாக்கம்!

## குடும்பத்தினருக்கு பரிவுத் தொகையை – இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

சென்னை, மே 5

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாள் - தமிழ் வார விழா நிறைவு விழாவிற்கு தலைமையேற்று 5 சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கி அவர்களின் குடும்பத்தினருக்குப் பரிவுத் தொகையும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்குகிறார்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாள் - 'தமிழ் வார விழா' நிறைவு விழா முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (05.05.2025) கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது.

முதலமைச்சர் அவர்களால் 22.4.2025 அன்று சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ், 'பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 5 வரை தமிழ் வார விழா கொண்டாடப்படும்' எனவும், இவ்விழாவில் கவியரங்கங்கள் மற்றும் இலக்கிய கருத்தரங்குகள், பாரதிதாசன் இளம் படைப்பாளர் விருது, தமிழ் இலக்கியம் போற்றுவோம், பள்ளிகளில் தமிழ் நிகழ்ச்சிகள், தமிழ் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் கொண்டாடப்படும் என்ற அறிவிப்பு வெளியிட்டார்கள்.

தமிழ் வளர்ச்சித்துறை, செய்தித் துறை, கலை பண்பாட்டுத்துறை என பல்வேறு அரசு துறைகள் இணைந்து இத்திட்டத்தினை 29.4.2025 முதல் 5.5.2025 வரை தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கவியரங்கங்கள், இலக்கிய கருத்தரங்குகள், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, கலைப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் வார விழாவின் நிறைவு விழா இன்று (5.5.2025) காலை 10.30 மணியளவில் சென்னை வாலாஜா சாலையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சித்துறையின் வாயிலாக 5 சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கியதன் தொடர்பாக அவர்களின் குடும்பத்தினருக்குப் பரிவுத் தொகையும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் முதலமைச்சர் அவர்கள் வழங்குகிறார்கள்.

இவ்விழாவில் பல்லவி இசைக்குழுவின் வாயிலாக 'பாவேந்தரின் எழுச்சி பாடல்களும்', நரேந்திர குமார் நடன அமைப்பில் சென்னை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி மாணவியர்களின் 'தமிழ் அமுது நாட்டிய நிகழ்ச்சி'யும், அனர்த்தனா குழுவினரின் 'சங்கே முழங்கு' மாபெரும் நடன நிகழ்ச்சியும், கலைமாமணி திண்டுக்கல் ஐ.லியோனி அவர்களின் தலைமையில் 'பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் விஞ்சி நிற்பது மொழி உணர்வா! சமூக உணர்வா! என்ற தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளன. பாவேந்தருக்கு பெருமை சேர்க்கும் வகையில் நடத்தப்படும் இவ்விழாவில் தமிழ் ஆர்வலர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரசு தமிழ் வளர்ச்சித் துறை - எம்.கே.எஸ். அகாடமி மகளிர் குழு இணைந்து நடத்திய

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் தமிழ் வார விழா!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்! அ.ம.துரைவீரமணி பங்கேற்பு!

சென்னை, மே. 05

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை எம்.கே. எஸ். அகாடமி மற்றும் மகளிர் சுய உதவிக் குழு கூட்டமைப்பு இணைந்து நடத்தும் புரட்சி கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் தமிழ் வார விழா (29.04.2025 முதல் 05.05.2025) ஒரு வாரம் நடைபெறுகிறது.

ஆரிய ஓர்க் இலவச பயிற்சி துவக்க விழா (பேட்ச் 6) (03.5.2025 சனிக்கிழமை) காலை 9 மணி முதல் மதியம் 12:30 மணி வரை பேரறிஞர் அண்ணா எழில்மிகு பசுமை பூங்கா, அயப்பாக்கத்தில் நடைபெற்றது.

பேச்சுப்போட்டி பாரதிதாசன் பார்வையில் தமிழ் உணர்வு (அ) பாரதிதாசன் நாட்டுப்பற்று எனும் தலைப்பில் நடைபெற்றது.

கட்டுரைப் போட்டி பாரதிதாசன் பார்வையில் சமுதாய சீர்திருத்தம் (அ) பெண்கள் முன்னேற்றம் எனும் தலைப்பில் நடைபெற்றது.

ஓவியப்போட்டி பாரதிதாசன் திருவுருவம் படம் கருப்பு வெள்ளை படம் வரைதல், பாரதிதாசன் கவிதைகள் ஒப்பிவித்தல் போட்டி உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளினை மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி துவக்கி வைத்தார்.

எம்.கே.எஸ். அகாடமி நிறுவனத் தலைவர், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சிகளில் டபல்யூ.ராஜேந்திரன், ஜி. ரவி, பொ.கீதா, சி.கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கினார்கள்.

ஜெ.வரஸ்ரீ, த.சித்ரா, ச. அனுசுயா, தே.பிரேமலதா, ஜெ.குணசெல்வி, கண். சாந்தி, க.தெய்வானை, சி.ஜெ.ஹேர்லின் பிரியா, பி.மரியதீபா ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

வீர.அறிவழகன், பி. பாலாஜி, கே.செல்வம், சாரல் கே.ராம், எம்.சபரி ராஜா, எச்.செண்பகவள்ளி, எஸ்.ஷர்மிளா, ஏ.தேன்மொழி, எஸ்.ஜெயந்தி, எம். கவிதா, பி.அஞ்சலைதேவி, ஆர்.சுரேகா, ஜெ.சாரதி, எஸ்.தேவிபிரியா, எஸ்.திவ்யபாரதி, எஸ்.ஜீவா ஆகியோர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டனர்.



பகரைன் வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் (NRTIA) "உறுப்பினர்களின் தொகுதிகளில் களப்பணி என்ற தலைப்பில் கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது. பொதுச் செயலர் மன்னை முபாரக் கூட்டத்தை ஒருங்கிணைத்து தொகுத்து வழங்கினார். பொறுப்பாளர் முகம்மது உசைன் மாலிம் தலைமை உரையாற்றினார். ரவிச்சந்திரன். சங்கீதா பாபு. கபீர் அகமது. சுல்தான் இப்ராஹிம். திருமேனி.குடந்தை ஆரிப். சதீஷ்குமார்.சர்புதீன். பிரபாகரன். மணிவண்ணன்.ஆபித். அசோக் குமார். குளச்சல் சபிக். டேவிட் .லலித். இப்ராஹிம். பகுருதீன். ஹக்கீம். சிதம்பரம்.மணிமாறன்.காதர். ஆசாத் மைதீன். ஏ சாகுல் ஹமீத்.சாகுல் ஹாஜா. மீரான் மைதீன். யூசுப் தீன். அக்பர் அலி. வல்லம் முகமது ஆரிப். வல்லம் பாரூக். மாரிதாஸ். அல்லா பிச்சை. மாலிக் முகமது. முகமது அபூபக்கர். ஜெகபர் சாதிக். கேசவன். சங்கர் தாஸ். செந்தில். வெங்கடேசன் .மற்றும் நிர்வாகிகள் அனைவரும் இதில் கலந்து கொண்டார்கள்

### மக்களின் ஏற்றத்துக்கு முதற்படியாய் விளங்குகிறது,

# அமுதா ஐ.ஏ.எஸ். தலைமையில் செயல்படும் 'முதல்வரின் முகவரி' துறை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் — சமூக வலைதளப்பதிவு!

சென்னை, மே 5-

"முதல்வரின் முகவரி துறை" குறித்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில், "அமுதா ஐ.ஏ.எஸ். அவர்களது தலைமையில் மக்களின் குறைகளைக் களைந்து - ஏற்றத்துக்கு முதற்படியாய் விளங்குகிறது, 'முதல்வரின் முகவரி துறை' என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வரின் வலைதளப்பதிவு வருமாறு:-

**மக்களால் எளிதில் அணுகக்கூடிய எல்லோருடைய குறைகளையும் காது கொடுத்துக் கேட்டுத் தீர்வு காணக் கூடிய நமது திராவிட மாடல் அரசில், எனது நேரடிக் கட்டுப்பாட்டில், அமுதா இ.ஆ.ப., அவர்களது தலைமையில் மக்களின் குறைகளைக் களைந்து ஏற்றத்துக்கு முதற்படியாய் விளங்குகிறது 'முதல்வரின் முகவரி துறை'!**

**பொதுமக்கள் இந்தத் திட்டத்தினைச் சிறப்புறப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### கழக அரசின் சாதனைகளை மக்களிடையே எடுத்துச் சொல்லும் வகையில் – தலைமைக் கழகம் அறிவிக்கும் கூட்டங்களை

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பகுதி வாரியாக சிறப்புற நடத்துவோம்!

## பகுதிச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் –பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, மே 5-

"கழக அரசின் சாதனைகளை மக்களிடையே எடுத்துச் சொல்லும் வகையில் தலைமைக் கழகம் அறிவிக்கும் கூட்டங்களை, சென்னை கிழக்கு மாவட்டத்தில் பகுதி வாரியாக சிறப்புற நடத்துவோம்!" என மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று (04.05.25, ஞாயிறு) மாலை 6.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, குக் சாலையில் உள்ள ஹெம் ராஜ்பவனில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.





இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ஜோசப்சாமுவேல், கே.எஸ்.ரவிச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பி.கே. மூர்த்தி, எம்.விஜயகுமார், சி.மகேஷ்குமார், கே.சந்துரு, கே.எஸ்.நாதன், எஸ்.மணிமுடி, எம்.பி. எம்.ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி, வே.உமாகாந்தன், மாவட்ட நிர்வாகிகள்: புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத் பகுதிக் கழக செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி. ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர். தேர்தல் பொறுப்பாளர்கள்: பி.முனியாண்டி, இரா.நரேந்திரன், பி.எம். யாழினி,

பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், பி.உதய சங்கர், ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலா தேவி, எம். இப்ராஹிம்கனி, ஆர். கலைச்செல்வி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில்விஜய், க.வினோத், எல். பி.எப். மோகன், பி.ஸ்ரீராமுலு, ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், பி.விஜயகுமார், து.ஆயிரம், இரா.வீரமணி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப்குமார், ஆர். எஸ்.சித்திக், எல்.சம்பத்குமார், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி. வி.நாகவள்ளி மற்றும் வட்டகழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

#### தீர்மானங்கள்!

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

மாநில முதல்வர்கள் பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிக்கலாம் எனும் உரிமையினை மாநிலங்களுக்கு உச்சநீதிமன்றத்தின் மூலம் போராடிப் பெற்றுத் தந்த மாநில சுயாட்சி நாயகன் தமிழ்நாட்டின் முதல்வர் அவர்களுக்கு, சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கில் பல்கலைக்கழகங்களின் வேந்தர் கழகத்தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்திய கல்வியாளர்களுக்கு இக்கூட்டம் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து ஐந்தாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் திராவிட மாடல் அரசின் மக்களின் மகத்தான பேரன்பைப் பெற்ற முதலமைச்சராகவும் இந்தியாவிற்கே ரோல் மாடலாக தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலைவராகவும் திகழும் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து மகிழ்கிறது.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.69. விழுக்காடு, தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 3.58 லட்சம், உயர்கல்வி சேர்க்கை விகிதம் 47 விழுக்காடு, நிலையான வளர்ச்சியில் இந்தியாவில் இரண்டாவது இடம், சமூக முன்னேற்றக் குறியீட்டில் இந்தியாவில் முதலிடம் என நான்காண்டில் தமிழ்நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்லும் கழக அரசின் சாதனைகளை மக்களிடையே எடுத்துச் சொல்லும் வகையில் தலைமை கழகம் அறிவிக்கும் கூட்டங்களை பகுதி வாரியாக நடத்துவதென்று முடிவெடுத்தும்.. ஜூன் 1 மதுரை மாநகரில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்று சிறப்புமிக்க பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்க உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.